[1987 நவம்பர் 17

போளூர் பகுதியில் சர்க்கரை ஆலை.

153—(*வினா எண் 12511)—திரு. ஜெ. ராஜாபாபு : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் பகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை பொதுத்துறையில் அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. ஜெ. ராஜாபாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில தினங்களுக்கு முன்பு கொடுத்த பொது நிறுவனங்கள் குழுவினுடைய பரிந்துரையில், போளூரில் அமைய இருக்கின்ற சர்க்கரை ஆலையை மத்திய அரசு தனியாருக்குக் கொடுக்க இருப்பதாக ஒரு செய்திக் குறிப்பு இருக்கிறது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூரில் அப்படி ஒரு சர்க்கரை ஆலை துவங்குவதற்கு எந்தவிதமான உரிமமும் தற்போது தரப்படவில்லை.

திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தமிழகத்தில் சர்க்கரை ஆலைகள் திறக்கும் திட்டம் ஏதாவது உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிறைய சர்க்கரை ஆலைகளுக்கு உரிமம் கிடைத்து இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், பல சர்க்கரை ஆலைகளை விரிவாக்கம் செய்வதற்கும் உரிமம் கிடைத்திருக்கிறது. ஆகவே, நிறைய ஆலைகள் இந்த ஆண்டு தமிழகத்தில் துவங்க இருக்கின்றன.

1987 நவம்பர் 17]

திரு. துரை கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கான உத்தரவு வந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலே தஞ்சையிலே ஒரு சர்க்கரை ஆலையை அமைக்க இருப்பதாகத் தகவல்கள் வந்து கொண்டு இருக்கின்றன. அப்படி தஞ்சையிலே வரக்கூடிய சர்க்கரை ஆலை எந்தப் பகுதியில் வர இருக்கிறது? அப்படி ஒரு செயற்குறிப்பு மத்திய அரசிடமிருந்து தங்களுக்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தஞ்சையிலே ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு ஒரு புதிய உரிமம் கிடைத்திருக்கிறது. அதை எந்த இடத்தில் நிறுவுவது என்பதைப் பற்றி அவர்கள் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில், தமிழகத்திற்கு 10, 15 சர்க்கரை ஆலைகள் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே தர்மபுரி மாவட்டத்தில் அரூர் தாலுக்காவிலே ஒரு சர்க்கரை ஆலை உருவாக இருக்கிறது. அது எந்த இடத்திலே உருவாக இருக்கிறது? அதற்கான நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அரூர் வட்டத்திலே கூட்டுறவுத் துறையிலே ஒரு சர்க்கரை ஆலையை நிறுவுவதற்கு உரிமம் பெறப்பட்டு இருக்கிறது. அது எந்த இடத்திலே ஆரம்பிக்கப்படும் என்பதை நிபுணர் குழு கூடி இடத்தைச் சென்று பார்த்து, முடிவு செய்யும்.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சர்க்கரை ஆலைகள் இந்த ஆண்டு நிறைய அமைய இருப்பதாகச் சொன்னார்கள். நமது சட்டமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், அறந்தாங்கி தொகுதியில் உள்ள நாகுடியில்

[1987 நவம்பர் 17

சர்க்கரை ஆலை ஆரம்பிக்கப்படும் என்று. அது எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட இருக்கிறது, எப்போது ஆரம்பிக்கப்படும் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கிக்கு இன்னும் உரிமம் கிடைக்க வில்லை. கிடைத்த பிறகு அது எந்த இடத்தில் ஆரம்பிக்கப் படும் என்பது இந்த மன்றத்தில் அறிவிக்கப்படும்.

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, நமது அமைச்சர் அவர்கள் சென்ற முறை பேசும்போது 35 சர்க்கரை ஆலைகளுக்கு மத்திய அரசிடமிருந்து உரிமம் கேட்டு இருப்பதாகச் சொன்னார்கள். மத்திய அரசிடமிருந்து எத்தனை ஆலைகளுக்கு உரிமம் கிடைத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நாம் 30 சர்க்கரை ஆலைகளுக்கு உரிமம் வேண்டும் என்று கேட்டோம். அப்போது இருந்த மத்திய அர சினுடைய சர்க்கரைக் கொள்கை 1,250 டன் கொள்ளளவு பிழி திறன் உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு உரிமம் தந்து கொண்டிருந் தார்கள். அந்தக் கொள்கை இப்போது மாற்றப்பட்டு 2,500 டன் கொள்ளளவு உள்ள ஆலைகளுக்குத் தருவதற்கு மத்திய அரசு முடிவு செய்தது. ஆகவே 30 சர்க்கரை ஆலைகளுக்கு உரிமம் கேட்பது என்று நாம் முடிவு எடுத்த நேரத்தில், 2,500 டன் என்று சொன்னவுடன் பல கூட்டுறவுத் துறை ஆலைகளுக்கு விரிவாக்கம் கேட்டோம். அதற்கும் அவர்கள் இசைவு தந்திருக் கிறார்கள். அதைப் போலவே புதிய சர்க்கரை ஆலைகளுக்கும் உரிமம் தந்து இருக்கிறார்கள். ஆகவே அந்த 1,250 டன் கொள் ளளவு திறன் என்று கணக்கு எடுத்துக் கொண்டால் ஏறக்குறைய 20 ஆலைகளுக்குப் பக்கமாக நமக்கு உரிமங்களை மத்தியப் பேரரசு வழங்கியிருக்கிறது.